முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 185/2020

இன்று 2025 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தனபால் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : ராஜமாணிக்கம் | கிராமம் | : |
| வயது | : | தாலூக்கா | : |
| நாள் | : 14-02-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) என் தாயார் இறந்தபோது எவ்வளவு வயது என்றால் சுமார் 70 முதல் 75 இருக்கும். சரியான வயது என்ன என்றால் 75 ஆகும். தாவா வழக்குரை, முதல் விசாரணையில் எந்த தேதியில் யாரிடம் பாகம் கேட்டேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. என் தாயார் இறந்த தேதி 12.07.2020 ஆகும். தாவா தாக்கல் செய்த தேதி 14.08.2020 ஆகும். என் அம்மா இறந்து சுமார் ஒரு மாதத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன்.

2) தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு, வழக்கு முன் அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் இல்லை. 4ம் பிரதிவாதி மீது அளித்த புகார் மீது எடுக்கப்பட்ட மேல் நடவடிக்கைகள் தொடர்பான விவரங்கள் எதுவும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. என் தாயார் உயில் எழுதும் அளவிற்கு நல்ல மனநிலையில் இல்லை எனவும் அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என வழக்குரையிலோ, கூடுதல் வழக்குரையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

3) 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை விவரங்கள் எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் என் தாயார் கடந்த 21.06.2017ம் தேதியில் உயில் எழுதி வைத்ததாக குறிப்பிட்டுள்ளது பொய் என்று சொல்லி இருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த முதல் விசாரணையில் 8ம் பத்தியில் 1ம் பிரதிவாதி பங்கினை ஒப்புக் கொண்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாக சொல்லி இருக்கிறேன் என்றால் சரிதான்.

4) எனவே எனக்கு 1ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரை விவரங்கள் தெரியும் என்றால் சரிதான். என் தாயாரின் ஈம சடங்கு காரியங்கள் முடிந்த மறுநாள் பிரச்சினை ஆரம்பித்தது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தான் எங்களுக்கு மூத்தவர் என்றால் சரிதான். என் தகப்பனார் இறந்து 4 வருடங்கள் கழித்து தான் என் தாயார் தாவாச் சொத்தை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அசல் கிரைய பத்திரம் யாரிடம் உள்ளது என்றால் யசோதரன் என்பவரிடம் அடமானத்தில் இருக்கிறது.

5) அசல் கிரைய பத்திரம் யாரிடம் இருக்கிறது என்பதை வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என் தாயார் எந்த ஆண்டு வீடு கட்டினார் என்றால் கடந்த 2003ம் ஆண்டு ஆரம்பித்தார். வீடு கட்ட அங்கீகாரம் பெற்ற விவரம் எனக்கு தெரியாது. என் தாயார் அண்ணா கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் கடன் பெற்று வீடு கட்டினார் என்றால் சரிதான். கடன் பத்திரத்தை நான் பார்த்திருக்கிறேன்.

6) 4ம் பிரதிவாதியும், என் தாயாரும் சேரந்து தான் கடன் பெற்றார்கள் என்றால் என் தாயார் தான் கடன் பெற்றார். 4ம் பிரதிவாதி உடன் சென்றிருக்கிறார். கடன் பத்திரத்தை என் தாயாரும், 4ம் பிரதிவாதியும் தான் எழுதிக்

கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரிதான். கடன் பெற்ற போது கிரைய ஆவணத்தை அடமானம் வைத்து தான் கடன் பெறப்பட்டது என்றால் சரிதான். கடன் எந்த ஆண்டு கட்டப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை. கடன் தொகை கட்டிய ரசீதுகள், ஆவணம் எப்போது திரும்ப வாங்கப்பட்டது என்ற விவரங்கள் எனக்கு தெரியாது.

7) என் தாயார் யசோதரனிடம் எந்த தேதியில் கடன் பெற்றார் என்ற விவரம் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். யசோதரன் ஆவணத்தை திரும்ப தர மறுப்பதாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் அளிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.7 ஆவணத்தை நான் படித்துப் பார்த்திருக்கிறேன். வா.சா.ஆ.7 ல் 5ம் பக்கத்தில் வேறு சொத்துக்கள் இருப்பதால் அசல் ஆவணம் ஒப்படைக்காமல், ஜெராக்ஸ் ஆவணம் மட்டும் ஒப்படைப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8) அசல் கிரைய ஆவணம் 4ம் பிரதிவாதியிடம் இருக்கிறது என்றாலும், அதை மறைக்க யசோதரனிடம் இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தாயார் இறக்கும் வரை நல்ல மனநிலையில், நல்ல உடல் நலத்துடன் இருந்தார் என்றாலும், உடல்நிலை சரியில்லாமல் இல்லை என்றாலும் சரியல்ல. என் தாயார் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவ சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை.

9) வா.சா.ஆ.9 புகார் பெறப்பட்டது தொடர்பாக புகார் மனு ரசீது எதுவும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.9 புகார் எதுவும் காவல் துறையில் அளிக்கப்படவில்லை என்றாலும், வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றாலும் சரியல்ல. என் தாயார் கடந்த 21.06.2017ம் தேதியில் ஆவண எண் 132/2017 ன்படி நல்ல மனநிலையிலும், சுய நினைவுடனும் 4ம்

பிரதிவாதி பெயரில் ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்திருக்கிறார் என்றால் சரியல்ல.

10) என் தாயார் 12.07.2020 ம் தேதியன்று இறந்த பிறகு, 4 ம் நாள் காரியம் முடிந்த பிறகு உயில் ஆவணம் அனைவர் முன்னிலையிலும் படித்துக் காட்டப்பட்டு, 4 ம் பிரதிவாதி வசம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அப்போது 2, 3 பிரதிவாதிகளும் நானும் இருந்தோம் என்றால் சரியல்ல. உயில் ஆவணம் படித்துக் காட்டப்பட்டு, அது பற்றி 1 ம் பிரதிவாதிக்கு தெரியும் என்பதால் தான், அவர் என்னுடன் சேர்ந்து கொண்டு அதை மறைத்து பொய்யாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

11) கடந்த 21.06.2017 ம் தேதிய உயில் ஆவணத்தின் நகல் என்னிடமும், 1 ம் பிரதிவாதியிடமும் இருக்கிறது என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளுக்கும் உயில் ஆவணத்தின் நகல் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளுக்கு உயில் ஆவணம் அமலுக்கு வந்த விவரம் தெரியும் என்றாலும் அதனால் தான் 2, 3 பிரதிவாதிகள் பாகம் எதுவும் கோரவில்லை என்றால் சரியல்ல. பிரச்சினை ஏற்பட்ட பிறகு, 2, 3 பிரதிவாதிகள் என்னிடம் பேசினார்கள் என்றாலும், நான் அதை கேட்காமல் காவல் நிலையத்தில் புகார் அளித்து பிரச்சினை செய்தேன் என்றால் சரியல்ல.

12) நான் அளித்த புகார் பொய்யானது என்று காவல் நிலையத்தில் விசாரித்து சொன்னார்கள் என்றால் சரியல்ல. தாவாச் சொத்து 4 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதால் தான் 2, 3 பிரதிவாதிகள் என்னை காலி செய்யச் சொன்னார்கள் அல்லது வாடகையை 4 ம் பிரதிவாதிக்கு கொடுக்கச்

சொன்னார்கள் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியை தொந்தரவு செய்ய பொய்யான விவரங்களுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கல்ல என்றாலும், தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

(4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

PRAVEEN KUMAR T

Digitally signed by PRAVEEN KUMAR T
Date: 2025.02.14 15:25:45 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.